
# வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள் 17

## நாடக மாந்தர்

| வேடர்கள் | புறாக்கள் |
|---|---|
| இடும்பன் | அம்மாப்புறா |
| கடம்பன் | அப்பாப்புறா |
| குடும்பன் | தம்பிப்புறா |
| சுடும்பன் | தங்கச்சிப்புறா |
| சோம்பன் | மற்றும் 4 புறாக்கள் |
| திடும்பன் | எடுத்துரைஞர் |
| உடம்பன் | பிள்ளைகள் |
| வடம்பன் | பாடகர்கள் |

**திரை விலகுகிறது**




(மாணாக்கர் சிலர் உறைநிலையில் மேடையில் நிற்கிறார்கள். பின்னணி இசை ஒலிக்க மெதுவாக நின்ற இடத்திலேயே அசைகிறார்கள். சில மாணாக்கர் மேடையின் கீழே இடது பக்க மூலையினின்று கீழே வரும் பாடலைப் பாடுகிறார்கள். பாடலுக்கு ஏற்ப மேடையில் அசைந்து மாணவர் அபிநயிக்கிறார்கள். நெறியாளர் தமது கற்பனைக்கு ஏற்ப பாடலைக் காட்சிப் படுத்தலாம்)

(பாடல்)

சின்னச் சின்னக் குருவிகள் - எங்கள்
சிறுவர் சிறுமிக் குருவிகள்
வண்ண வண்ணச் சட்டைபோடும்
வாயாடிக்குருவிகள்
பள்ளிக் கூடம் சென்று - கல்வி
பயிலுகின்ற குருவிகள்
மெல்ல மெல்ல அறிவு சேர்க்கும்
மிக உயர்ந்த குருவிகள்

அம்மா அப்பா சொல்லைக் - கேட்கும்
அன்பு நெஞ்சக் குருவிகள்
அநீதி கண்டு கோபம் கொள்ளும்
அதி உயர்ந்த குருவிகள்.
நாளை இந்த நாட்டை - இங்கு
நடத்தப்போகும் குருவிகள்
இந்த மண்ணின் புகழை உலகில்
ஏற்றப்போகும் குருவிகள்

(குருவிகளான மாணாக்கர் பாடி ஆடுகின்றனர். மேடையின் DR க்கு ஆள் 1 வருகிறார் கைதட்டி மாணாக்கரை கூப்பிடுகிறார்.

ஆள் 1 : (கைதட்டி) குருவிகளே! குருவிகளே! (பிள்ளைகள் ஆட்டத்தை விட்டுத் திரும்புகிறனர்)

ஆள் 1 : உங்களைத்தான் இஞ்ச வாருங்கோ.

ஆள் 2 : எங்களையோ? கூப்பீட்டீங்களோ?

ஆள் 1 : ஓம்! ஓம்! கொஞ்சம் இஞ்ச வாருங்கோ.

(பிள்ளைகள் தயங்கித் தயங்கி அவர் அருகில் வருகிறார்கள். DR , DC , DL இல் வரிசையாக ஒழுங்கின்றி நிற்கிறார்கள்)

ஆள் 1 : (சபையோரைக் காட்டி) இவைய உங்களுக்கு தெரியுதே?

ஆள் 2 : (சபையோரைப் பார்த்து விட்டு ) ஆ! இவையைத் தெரியாதே. எங்களின்ர அப்பா! அம்மா!

ஆள் 3 : அண்ணா! அக்கா.

ஆள் 4 : தம்பி! தங்கச்சி!.

ஆள் 5 : எங்களின்ர ரீச்சர்ஸ்! அதிகாரிகள்!

ஆள 6 : (வியப்புடன்) அங்க பாதார்ஸ்! பிறதர்ஸ்! சிஸ்ரஸ்!

ஆள் 7 : (ஆச்சரியத்துடன் ) எங்கட பிறின்சிப்பலும் வந்திருக்கிறார்

ஆள்1 : ஓம்! ஓம்! எல்லாரும் வந்திருக்கினம். பெற்றோர் தின விழாவுக்கு உங்களை ஒரு நாடகம் நடிச்சுக் காட்டட்டாம் (பிள்ளைகள் பயப்படுகிறார்கள்)

ஆள்2 : (தயக்கத்துடன்) நாடகமோ? இவையளுக்கு ஏற்ற நாடகம் நடிக்க எங்களுக்கு ஏலாது. (திரும்புகிறார்கள்)

ஆள்1 : நில்லுங்கோ! நில்லுங்கோ!(திரும்புகிறார்கள்) இங்கே வாங்கோ என்ன சொல்றியள்?

ஆள்2 : இவையளுக்கு ஏற்ற நாடகமெண்டா வசனம் பேசவேணும். சீன்ஸ் கட்ட வேணும்

ஆள்3 : உடுப்புகள் போடவேணும்.

ஆள்4 : சரியாச் செய்யவேணும், கொஞ்சமும் பிழைவிடக் கூடாது.

ஆள்5 : பிழை விட்டா வெருட்டுவினம், இல்லாட்டா அடிப்பினம்.

ஆள்6 : ஓம்! ஓம்! சரியா கஷ்டப்படவேணும்.

ஆள்2 : அப்படிக் கஷ்டப்பட எங்களுக்கு ஏலாது. நாங்கள் விளையாட வேணும்.

ஆள்1 : அப்ப விளையாடிக்கொண்டு நாடகம் போடுங்கோ. நாடகம் எண்டா ஒரு விளையாட்டுத்தானே. (பிள்ளைகள் யோசிக்கிறார்கள்)

ஆள்2 : அப்படியெண்டா நாங்கள் ஆடிப்பாடி ஒரு கதையைச் சொல்லுவம். இவையள் பாக்கட்டும் பிழை விட்டாக் குறை சொல்லக்கூடாது சரியோ எண்டு கேட்டுச் சொல்லுங்கோ.

ஆள்1 : (சபையைப்பார்த்து) சரியே? இவையள் தங்கட பாட்டுக்கு ஆடிப்பாடி ஒரு கதைய நடிக்கப்போறாங்களாம். உங்கட விருப்பம் என்ன? சொல்லுங்கோ (கேட்பதான பாவனை) ஆ ஆ (கேட்டதான திருப்தி)(பிள்ளைகளிடம் திரும்பி) நீங்க எப்படி ஆடினாலும் அவையளுக்கு சந்தோசமாம் பொறுங்கோ (சபையைப்பார்த்து ) என்ன கதையோ? பொறுங்கோ கேட்டு சொல்றன் (பிள்ளைகளைப் பாத்து ) கதை என்னெண்டு மட்டும் சொல்லட்டுமாம்.

(பிள்ளைகள் CC க்கு வந்து கூடி நின்று கதைக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் உயரத்தில் குறைந்தவர். சின்னவராதலால் அவர்களுடன் கதையிற் பங்கு கொள்ள முடியவில்லை கூட்டத்துடன் புக முயற்சி செய்து முடியாது போகவே அங்கு நின்ற தடியருள் ஒருவரின் முதுகின் மீது பாய்ந்து ஏறி அதில் இருந்த வண்ணம் கதையிற் பங்குகொள்கிறார். பிள்ளைகள் கதைபற்றிக் கூடி ஆலோசிக்கின்றனர்.)



ஆள்1 : (திரும்ப வந்து ) எல்லாம் இவையள் எங்களுக்குச் சொல்லித்தந்த கதைதான்

ஆள்3 : வேடனும் புறாக்களும்

ஆள் 2 : கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லுங்கோ.

ஆள்4 : ஒரு வேடன் வச்ச வலையில் சில புறாக்கள் வந்து அகப்பட்டுக் கொண்டுதுகள்.

ஆள்5 : அம்மா அப்பா சொல்லைத்தட்டி

ஆள்4 : ஓமோம் அம்மா அப்பா சொல்லத்தட்டி அகப்பட்டு கொண்டுதுகள் பிறகு தங்கட ஒற்றுமையால அந்த வலையத் தூக்கிக்கொண்டு பறந்ததுகள்.

ஆள்6 : ஒன்றுபட்டால்

எல்லோரும் : உண்டு வாழ்வு.

ஆள்1 : ஆ! அந்தக் கதையே சரி நல்லா இருக்கும்.

ஆள்2 : அப்ப நாங்கள் போய் வேஷங்களைப் போட்டுக்கொண்டு வாறம் என்ன?(போகிறார்கள்)

(கீழிருந்து பாடிய மாணாக்கர்கள் மேடையின் DR க்கு வந்து வரிசையாக நின்று சின்னச் சின்னக் குருவிகள் ... என்ற பாடலை மீண்டும் பாடுகிறார்கள். மேடையில் நாடக ஒழுங்குகள் நடைபெறுகின்றன. பாடல் நிற்க ஏனைய பாடகர்கள் மேடையை விட்டு இறங்குகிறார்கள். ஆள் ஒன்று மேடையைச் சுற்றிப் பார்த்தபடி DL க்கு வருகிறார்)

ஆள்: 1 : (பின்னர் பார்த்து விட்டு) எல்லாம் சரியே ? (சபையைப் பார்த்து ) இவையள் சிலர் மரங்களாக நிற்கிறார்கள் (தூரப்பார்த்து ) ஆ! அங்க, வேடன்களுக்கு வேசம் போட்டுக்கொண்டு சில ஆட்கள் வாறாங்கள் (ஓடிப்போய்ப்பார்த்து) ஒரு சோம்பேறி வேடனும் வாறார் வேடன்கள்தான். சரியான வேசங்கள்தான். வேடன்கள் ஆடிப்பாடிக் கொண்டல்லோ வருகினம். நாங்களும் அவையளை வரவேற்போம் என்ன.



(DR க்கு வந்து கீழே நிற்கும் பாடகரைப் பார்த்து கைத்தாளம் போட்டு பெரிய பாகவதர் போல அபிநயித்து)

தாந் திமி தக தக ததிங்கிணதோம் - தத்திமிதக தாந்திமிதக தக ததிங்கிணதோம்.

(சொல்லி முடிய ஆள்1 பாடகருடன் வந்து அமர்ந்து கொள்கிறார்)

வேடர்கள் UL இலிருந்து புறப்பட்டு மேடைக்கு ஆட்ட நடையில் வருகிறார்கள். பாடலுக்கு தக்க பல ஆட்டக் கோலங்கள் புரிகிறார்கள். (பாடலைக் காட்சிப்படுத்துவது நெறியாளரின் கற்பனையைப் பொறுத்தது.)

இடும்பன் : காட்டில் வாழும் வேடர் வருகிறார். கையில் வில்லம்புடன் காட்டில் வாழும் வேடர் வருகிறார்.

பாடகர் : (திருப்பிப் பாடுகிறார்கள்)

கடம்பன் : காடை கவுதாரி இனங்களை கண்ணி வைத்துப் பிடித்து கடைக்குக் கொண்டு விற்று வந்துடுவோம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பாடகர் : (திருப்பிப் பாடல்)

குடும்பன் : வலையை விரிப்போம் பறவை பிடிப்போம்.

உடம்பன் : வந்து விழுங்கள் எடுத்துச் செல்வோம்.

பாடகர் : (திருப்பிப் பாடல்)

கடம்பன் : விற்றது போக மிச்சத்தை நாங்கள் உரித்து வெட்டி உண்டு மகிழ்வோம்

பாடகர் : காட்டில் வாழும் வேடர் வருகிறார்.
கையில் வில்லம்புடன்
காட்டில் வாழும் வேடர் வருகிறார்.

இடும்பன் : இவர்களுக்குத் தலைவன் நானேதான்
என்ர பெயர் இடும்பன் எண்டு சொல்லுவார்களாம்.

பாடகர் : (திருப்பிப்பாடல்)

இடும்பன் : என்ர சொல்லை மீறியவரை இங்கு நானே விலக்கி வைப்பேன்.

பாடகர் : (திருப்பிப் பாடல்)
தலைவன் சொல்லைத் தட்டி நடப்பவர் சரியாய் வேலை செய்யவும் மாட்டார்.

பாடகர் : காட்டில் வாழும் வேடர் வருகிறார்.
கையில் வில்லம்புடன்
காட்டில் வாழும் வேடர் வருகிறார்

(வேடர்கள் உறை நிலையில் நிற்கிறார்கள். ஆள்1 மேடைக்கு வந்து வேடர்களை ஊன்றி நோக்கியபின் ஒவ்வொருவருக்கு அருகிலும் சென்று தொட்டுக்காட்டி அறிமுகம் செய்கிறார்.)

ஆள் 1 : ஆக்களின்ர விறுத்தத்தப் பாருங்கோ ...........இவர் தலைவர்; இடும்பன்; மற்றவர் கடம்பன்; இவர் திடும்பன்; அவர் குடும்பன்; இவர் உடம்பன்; இவர் சுடும்பன்; அவர் வடம்பன்; இவரைத் தெரியுமோ இவர்தான் சோம்பன். இவங்களெல்லாம் காட்டுக்கு வந்திருக்கிறார்கள் வலை விரிச்சுப் புறாப் பிடிக்க விறுமன்கள்... சரியான விறுமன்கள் ம்... (பெருமூச்சு) எந்தப் பறவை அகப்படப் போகுதோ? காட்டில் வாழும் வேடர் வருகிறார்

(போய்ப் பாடகருடன் அமர்ந்து கொள்கிறார்)

இடும்பன் : (காட்டைச் சுற்றிப்பார்த்து) ஆ! சோக்கான காடு. (சுற்றி வந்து) நல்ல இடம் நிறைய மரங்கள் . (தூரப்பார்த்து DL க்கு வந்து ) ஆ! அங்க ஒரு மரமும் தெரியுது.

குடும்பன் : (வாயைச் சப்புக்கொட்டி) மரங்களில் சின்னச் சின்னப் பழங்களும் தொங்குது.

சோம்பன் : (சோம்பல் கலைத்து CC க்கு ஓடி வந்து நின்று) ஆ! பழங்கள் பழங்கள்!! பழங்களைச் சாப்பிட்டாப் பசிதீரும்.

(எல்லோரும் முறைக்க) சோம்பன் தலையைக் கீழே போட்டுக் கொள்கிறான்)

கடம்பன் : முன்னமேயே நிறையப் பறவைகள் வந்து போய் இருக்குதுகள் போலத் தெரியுது.

திடும்பன் : காட்டு மிருகங்கள் வந்த தடயமும் கூடத் தெரியுது. இறைச்சிக்கு நல்ல மிருகங்கள்.

சோம்பன் : (எழுந்து) ஆ! இறைச்சி, இறைச்சி, இறைச்சி சாப்பிட்டா (நாக்கை சுழற்றுகிறான்)
(எல்லோரும் முறைக்க தலையைக் கீழே போடுகிறான்)

உடம்பன் : அகண்ட பெரிய மரங்கள், சோக்கான நிழல்

வடம்பன் : நித்திரை கொள்ள நல்ல இடம்.

சோம்பன் : (எழுந்து) ஆ! நித்திரை, நித்திரை, நித்திரை. எவ்வளவு நல்லது.

இடும்பன் : (சோம்பனின் காதைப்பிடித்து DL க்கு இழுத்துச் சென்று)
டேய் சோம்பா சுறு சுறுப்பாய் இருக்கவேணும்; நாங்கள் பறவை பிடிக்க வந்திருக்கிறோம்; காரியத்தில் கண்ணாயிருக்க வேணும்.

சோம்பன் : (கொட்டாவி விட்டு ) நான் காரியத்தில் எப்பவும் கண்தான்
(முறைக்க மீண்டும் நித்திரை கொள்கிறான்)

திடும்பன் : (சோம்பனின் காதைப்பிடித்து) சீக், சோம்பேறிச் சோம்பா!(இழுத்துக் கொண்டு சென்று மேடையில் DR இல் விட்டு) இஞ்ச நிண்டு பறவைகள் வருகுதோ எண்டு பார்.

சோம்பன் : பறவைகள் பாவமெல்லே. பிடிக்கிறது சரியே?

(திடும்பன் முறைக்க தலையைக் கீழே போட்டுக் கொள்கிறான்)

இடும்பன் : (பாட்டு)
வலையை எடுத்து இங்கே விரியடா
வாடா வடம்பா
வலையை எடுத்து இங்கே விரியடா

பாடகர் : (திருப்பிப் பாடல்)

வடம்பன் : இழுத்துக் கட்டி முடிச்சு போடு

சுடும்பன் : இந்தப்பக்கம் சரியாயில்லை

பாடகர் : (திருப்பிப் பாடல்)

இடும்பன் : தானியங்களை மேலே தூவு
வலையை மறைத்து குழையைப்போடு

பாடகர் : வலையை எடுத்து இங்கே விரியடா

வாடா வடம்பா
வலையை எடுத்து இங்கே விரியடா
(வலையை விரித்துக் குழையைப் போட்டு தானியங்களை மேலே தூவுகிறார்கள். பின்பு ஆறுதலாகப் பார்த்து)



இடும்பன் : வலைய விரிச்சுப் போட்டம்.

திடும்பன் : மறைச்சு குழையப் போட்டுட்டம்.

சுடும்பன் : தானியங்களையும் தூவியாச்சு

இடும்பன் : ஓம் இனிமேல் மறைஞ்சிருப்போம். அப்பதான் பறவைகள் பயமில்லாமல் வரும். சோம்பன் பறவைகள் வருகுதோ எண்டு பாக்கிறானோ பாருங்கோ. (எல்லோரும் DR க்குச் சென்று பார்க்கிறார்கள். அவன் குறட்டை பெரிதாக விட்டுத் தூங்குகிறான்) (பாடகர்கள் குறட்டை ஒலியைப் பெரிதாக எழுப்பலாம்.)

திடும்பன் : இஞ்ச இவர் நல்லாப் பறவை பார்க்கிறார்.

குடும்பன் : இவன்ர குறட்டச் சத்தத்தில பறவைகள் ஓடப் போகுது டேய். (உதைக்கிறான்) (சோம்பன் திடுக்கிட்டு எழும்பி)

சோம்பன் : பறவைகள் ... குருவிகள்... ஆ... பறவைகள்
(பரபரத்தப்படி இடும்பன் நின்ற DL க்கு ஒடி வருகிறான்)

இடும்பன் : டேய் சோம்பேறி நித்திரையே கொண்டனீ?
(மீண்டும் சோம்பன் தலையைத் தொங்கப் போடுகிறான்.)

இடும்பன் : இவனையும் தூக்கிக் கொண்டு போய்ப் பதுங்கி இருப்பம்.

(சோம்பனைத் தூக்குகிறார்கள். முடியவில்லை நின்ற வேடர்களுள் தடியனான வேடன் ஒருவனிடம் தூக்கும்படி கேட்கிறார்கள். அவன் சோம்பனை அனாயசமாகத் தூக்கிக் கொண்டு செல்ல ஏனைய வேடர்கள் அவன் பின்னால் வரிசையாகச் சென்று DL இல் பதுங்கிய படி இருக்கிறார்கள்.

ஆள் 1 : (மேடையின் CC க்கு வந்து சபையைப் பார்த்து) வலைய விரிச்சு, தானியங்களைத் தூவிப்போட்டு மறைஞ்சு இருந்தினம். அப்ப... வானத்தால் வெள்ளைப்புறாக்கள் சிறகை அடிச்சு தங்களை மறந்து சுதந்திரமாப் பறந்து வந்தினம். அதில் அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சிப் புறாக்கள் எல்லாம் இருந்தினம். ஆ... அவங்கட குரல் கேட்குது. கொஞ்சம் அமைதியாய்க் கேளுங்கோ....

(CR க்கு சென்று பார்த்து மீண்டும் DR க்கு வந்து நின்று)

ஆ... அங்க தூரத்தில வருகினம். அதுதான் சத்தம் மெல்லமாக கேட்குது. ஆ... இஞ்ச கிட்ட வந்திட்டினம். ஐயோ பாவம். வேடன்கள் வலை விரிச்ச காட்டுக்குத்தான் வருகினம். வலை இருக்கிறது இந்த அப்பாவிப் புறாக்களுக்குத் தெரியாது (சென்று பழையபடி அமர்கிறார்)

(புறாக்கள் பாடியபடி மேடையில் தோன்றி ஆடுகின்றன. ஆடற் கோலங்களும், காட்சிப்படுத்தலும் நெறியாளரின் கற்பனைக்கு ஏற்ப அமையலாம்.)

பாடகர் : (பாடல்)

வெள்ளை வெள்ளைப் புறாக்கள் - சிறகை
வேகமாய் தான் அடித்தே
கொள்ளை கொள்ளையாக - வானத்திற்
கூடி வருகுதே.

அப்பாப்புறா : அப்பா நான்தானே - இவர்கள் என் அருமை மக்களே.!

அம்மாப்புறா : அம்மா நான்தானே - இவர்கள் என் அருமை மக்களே.!

புறாக்கள் : சின்னச் சின்னக் குஞ்சுகள் - நாங்கள்
இவர்கள் பிள்ளைகள்
அம்மா அப்பா உள்ளார் - எமக்கு
ஆருக்கும் பயமில்லை.

அப்பாப்புறா : (கைதட்டிக் கூப்பிட்டு)

என்னரும் பிள்ளைகளே - வாருங்கள்
என் சொல்லைக் கேளுங்கள்.
சின்னச் சின்னப் பிள்ளைகள் -செய்வதை
யோசித்துச் செய்யுங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அம்மாப் புறா : (கைதட்டிக் கூப்பிட்டு)

போகும் வழியினிலே - பல
பொல்லாப்புக்கள் நேரும்
ஆகையினால் கவனம் - பிள்ளைகாள் ஆலோசித்துப் போங்கள்
(புறாக்கள் காட்டைச் சுற்றிப் பார்க்கின்றன.)

இடும்பன் : (இரகசியமாக) புறாக்கள் வலைக்குப் பக்கத்தில் வந்திட்டினம்

சோம்பன் : (எழுந்து சத்தத்துடன்) புறாக்கள் வந்திட்டனமோ (எல்லாரும் முறைக்க சோம்பன் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்கிறான்.)

தம்பிப்புறா : அம்மா பசிக்குதம்மா. கனநேரம் வானத்தில் சிறகை அடிச்சு அடிச்சு நல்லாக் களைச்சுப் போனம்

தங்கச்சிப்புறா: இந்தக் காட்டில நிறையப் பழங்கள் இருக்குது.

புறா 3 : அங்க, அங்க ஒரு இடத்தில கனக்கத் தானியம் கிடக்கு

அப்பாப்புறா : எங்க. எங்க (பார்த்து விட்டு தூரப்போய் நின்று யோசிக்கிறது.)

புறா 4 : அப்பா, அப்பா குரக்கன், சாமை

பறா 5 : அரிசி, நெல்லு

புறா 6 : தினை, கோதுமை

புறா 1 : சோளம் , வரகு

புறா 1 : ஐயோ ஒரு இடத்தில எவ்வளவு தானியங்கள்.

புறா 1 : (அப்பாவிடம் வந்து) அப்பா, அங்க நிறைய தானியங்கள். அதுகளப் போய்ச் சாப்பிடட்டே?

புறா 2 : எனக்குச் சரியாய்ப் பசிக்கிறது

எல்லாப்
புறாக்களும் : பசிக்குது, பசிக்குது, பசிக்குது.

அம்மாப்புறா :(அப்பாப் புறாவுக்கருகில் வந்து) அப்பா, என்ன யோசிக்கிறியள்? பிள்ளைகள் பசியில அழுகுதுகள். அதுகள் சொன்னது உங்களுக்குக் கேக்க இல்லையே?

அப்பாப்புறா : இல்லை... இந்தக் காட்டுக்குள்ள தானியங்கள் எப்படி வந்திருக்கும்? அதுவும் ஒரு இடத்தில கனக்கத் தானியங்கள்.

இடும்பன் : மொக்கன் நான். தானியத்திற்கு பதில் பழங்கள் போட்டிருக்கலாம்.

திடும்பன் : அதிலயும் பெரும் மொக்குத்தனம். ஒரு இடத்தில் பலதானியங்களப் போட்டது.

சோம்பன் : நீங்கள் மொக்கன்கள் எண்டு எனக்கு எப்பவோ தெரியும். (முறைக்க தலையைத் தொங்கப்போடுகிறான்.)

அப்பாப்புறா : எப்படி எல்லாத் தானியங்களும் ஒரு இடத்தில வந்தன?

தம்பிப்புறா : உங்களுக்கு எதிலையும் சந்தேகந்தான்.

புறா 2 : (நெல்லைப் பார்த்து ) என்னையோ? என்னையோ? பொறு வாரன். (அப்பாவைப்பார்த்து) இஞ்சே நெல் மணிகள் என்னை வா வா எண்டு கூப்பிடுது.

புறா 3 : வரகரிசி என்ன வடிவா இருக்குது.

புறா 4 : தினையும், சாமையும் சிறப்பா இருக்குது.

அம்மாப்புறா : பிள்ளைகள் அப்பா சொல்லுறதையும் கேளுங்கோ. கவர்ச்சியைப் பார்த்து எடுபடக்கூடாது. அதுக்கு பின்னால இருக்கிற ஆபத்தையும் உணர வேணும்.

தம்பிப்புறா : ஆபத்து, என்ன ஆபத்து ? எல்லாத்துக்கும் பயந்து என்னதான் செய்யலாம்?

அப்பாப்புறா : தம்பி, நான் பயப்படச் சொல்ல இல்லை. கொஞ்சம் நிதானமா, யோசிக்கச் சொல்லுறன்.

தம்பிப்புறா : யோசினை, யோசினை, யோசினை. இந்தப் பெரியாக்கள் எப்பவும் இப்படித்தான். சரியான சிலோக்கோச்சிகள்

எல்லாப் புறாக்களும் ஓம் ஓம் சரியான ஸ்லோகோச்சிகள்

புறா 2 : ஓம் எங்கட விருப்பத்திற்கு விடவும் மாட்டாங்கள். தாங்களும் ஒண்டும் செய்யவும் மாட்டாங்கள்.

தம்பிப்புறா : எனக்கு இவங்கட உபதேசத்த கேட்க ஏலாது. நான் தானியங்களைச் சாப்பிடப் போறேன்.

அம்மாப்புறா : (இரக்கத்துடன்) பிள்ளை, அப்பாவின்ர சொல்லக் கொஞ்சம் கேளுங்கோ.

தங்கச்சிப்புறா: நானும் அண்ணாவோடு போய்ச் சாப்பிடப்போறன்.

அம்மாப்புறா : (கோபத்துடன்) பிள்ளைகள் அப்பாவின்ர சொல்லை கொஞ்சம் கேளுங்கோ.

தம்பிப்புறா : எங்களுக்குப் பசிக்குது.

தங்கச்சிப்புறா: அதில் ஒரு ஆபத்தும் இராது. (இரண்டு புறாக்களும் மெல்லச் சென்று சாப்பிடப் போக, வலையில் அகப்பட்டுக் கொள்கின்றன. ஏனைய புறாக்கள் அதைக் கண்டு அவதிப்படுகின்றன.)

வேடர்கள் : (புறாக்களை எண்ணிப் பார்த்து பாடுகிறார்கள்)

இரண்டு புறா இரண்டு புறா
வலையில் வந்து விழுந்தது.
(கைதட்டி பைலா ஆடுகிறார்கள்)

புறா 3 : (ஓடித்திரிகிறது) ஐயோ! தம்பி, தம்பி, வலையில் அகப்பட்டுட்டான். (அப்பாவிடம் ஓடி வந்து) அப்பா, அப்பா தம்பியைக் காப்பாத்துங்கோ.

அப்பாப்புறா : (பதற்றத்துடன்) எப்படியம்மா காப்பாத்துறது? வலைய எப்படி உடனே அறுக்கிறது? வேடன்கள் இப்ப வந்திடுவான்களே.

தம்பிப்புறா : (விழுந்த புறாக்கள் அவலக்குரலில்) அப்பா அப்பா காப்பாற்றுங்கோ.

புறா 3 : எனக்குத் தாங்க ஏலாது. நானும் தம்பியோடு போகப் போறன். (புறா 3 வலையில் அகப்படுகிறது.) (ஏனைய புறாக்கள் பதறுகின்றன)

வேடர்கள் : (எண்ணிப் பார்த்துப் பாடுகிறார்கள்)
மூன்று புறா மூன்று புறா
வலையில் வந்து விழுந்தது
(பைலா ஆட்டம்)

புறா4 : நாங்களும் எங்கட தம்பி தங்கச்சியோடதான் போறம்.

புறா 5 : நாங்கள் வாழ்ந்தா ஒண்டாகத்தான் வாழ்வம்.

புறா 6 : செத்தாலும் ஒண்டாகத்தான் சாவம்.
(மூன்று புறாக்களும் வலையில் அகப்படுகின்றன.)

வேடர்கள் : (எண்ணிப் பார்த்துப் பாடுகிறார்கள் )

ஆறு புறா ஆறு புறா
வலையில் வந்து விழுந்தன
அத்தனையும் சாப்பிட்டா
ஆகா பெரிய சந்தோசம்.
(பைலா ஆட்டம்)

அம்மாப்புறா : (பதறிய படி அங்கும் இங்கும் ஓடி) ஐயோ என்ர பிள்ளைகள் எல்லாம் வலையில் அகப்பட்டுக் கொண்டதுகள். பிள்ளைகள் போன பிறகு என்னால எப்படி வாழ ஏலும் ? நானும் அவையளோட போறன். (தாயும் வலையில் விழுகிறது)

வேடர்கள் : (எண்ணிப்பார்த்த பின் பாடுகிறார்கள்)
ஏழுபுறா ஏழுபுறா
வலையில் வந்து விழுந்தன
(வேடன் ஒருவன் அம்மாபோல அபிநயித்து)
அம்மாப்புறா அம்மாப்புறா
அகப்பட்டுக் கொண்டது
(பைலா ஆட்டம்)

அப்பாப்புறா : நீங்கள் எல்லாம் போனபிறகு
எனக்கு இங்கை என்ன தனியா அலுவல்
(அதுவும் வலையில் அகப்படுகிறது)
(வேடர்கள் வெளிப்பட்டு புறாக்களைச் சுற்றி ஆடுகின்றனர்)

வேடர்கள் : (பாடல்)

ஒண்டு ரெண்டு மூண்டு நாலு
அஞ்சு ஆறு ஏழு
ஏழு புறா ஏழு புறா
எமக்கு வந்து வாய்த்தது.
சிறகை உரிப்போம் இறைச்சி எடுப்போம்
சிரித்துக் கொண்டே உண்ணுவோம்.
(பைலா ஆட்டம்)

திடும்பன் : டேய் நாங்களெல்லாம் குளிச்சு நாலு நாள் ஆகுது. குளிச்சா நல்லா பசிக்கும். குளிச்சிபோட்டு வந்து, இதெல்லாம் உரிச்சு நெருப்பில வேகவைச்சு சாப்பிடுவம். ஆனால் யாரைக் காவல் வைக்கலாம்?

எல்லோரும் : நாங்கள் எல்லோரும் குளிக்கவேணும்.

சோம்பன் : நான் இருக்கிறன், எனக்குத் தண்ணிக்குப் பயம் (மற்றவர்கள் முறைக்க தலையைக் கீழே போடுகிறான்.)

இடும்பன் : சரி சோம்பனுக்கு ஏற்ற வேலை இதுதான். இதுகளைப் பார்த்துக் கொண்டு நீ இஞ்ச இரு. நாங்கள் போய் குளிச்சுப்போட்டு வாறம் (வேடர்கள் போகிறார்கள். சோம்பன் DRக்கு ஓடி வருகிறான். வேடர்கள் போன திசையைப் பார்த்து வேடருக்கு சைகையால் முகபாவத்தால் ஏசுகிறான். பின்னர் புறாக்களைப் பார்த்து அழுகிறான். அவற்றின் கண்ணீரைத் துடைக்கிறான். விடுவிக்க முயற்சி செய்கிறான். முடியவில்லை. அழுது கொண்டு சென்று மேடையில் அமர்கிறான். புறாக்குஞ்சுகள் அழுகின்றன.)

ஆள் 1 : (மேடையில் DC க்கு வந்து) இஞ்ச, ஆபத்த உணராமல் நல்லாச் சாப்பிடுற ஆசையில அம்மா அப்பாவின்ர சொல்லை மீறி வந்து வலையில விழுந்து இந்தக் குஞ்சுப் புறாக்கள் அழுகுதுகள்.

ஆள் 2 : (கீழே நின்ற படி) பாவம், போய் அதுகளுக்கு ஏதும் உதவி செய்வமே?

ஆள் 1 : பொறும், கஷ்டம் வந்தா ஒவ்வொருத்தரும் தானா யோசிச்சி சுயமுயற்சி செய்து அதிலிருந்து மீள வேணும். முடியாட்டாப் பாப்பம். பொறுங்கோ என்னவோ கதைக்குதுகள்.
(மீண்டும் பாடகருடன் வந்து இருக்கிறார்)

அப்பாப்புறா : ஏன் பிள்ளையள் அழுகிறியள் எண்ணித்துணிக கருமம் .


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அம்மாப்புறா : துணிந்தபின் துக்கப்படக் கூடாது.

தம்பிப்புறா : (அழுதபடி) அம்மா, அப்பா அனுபவப்பட்ட உங்களின்ர சொல்லை கேக்கல்லை. எங்கள மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

தங்கச்சிபுறா : ஓமப்பா, நாங்கள் ஒரு நாளும் இந்தப் பிழைய விடமாட்டம்.

புறா 3 : இது எங்களுக்கு நல்ல பாடம்.

அப்பாப்புறா : மூத்தோர் மொழிகள் பொய்யல்லப் பிள்ளையள், தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை. (பீடிகையுடன்) இன்னும் சொல்லப்போனால் ....

அம்மாப்புறா : இதென்ன போதனையில இறங்கிட்டியள். நடக்க வேண்டியதை யோசியுங்கோ.

அப்பாப்புறா : என்ன நடக்கிற காரியம்? கஷ்டத்தில் ஆப்பிட்ட பிள்ளைகள் தாங்களாயோசிச்சு ஒரு வழிய காணட்டும். எனக்கும் ஒரு வழியக் காட்டட்டும்.

தங்கச்சிப்புறா: உன்னப் பார்த்துத்தான் நான் வந்து விழுந்தனான்.

புறா 3 : உன்னப் பார்த்துத்தான் நான் வந்து விழுந்தனான்.

புறா 4 : உனக்காகத்தான் நான் வந்தனான்.

புறா 5 : உனக்காகத்தான் நான் வந்தனான்.

புறா 6 : உங்க எல்லோருக்காவும் தான் நான் வந்தனான்.

புறா 2 : உன்னால நான் கெட்டன்.

புறா 3 : உன்னால நான் கெட்டன்.

புறா 4 : உன்னால நான் கெட்டன்.

புறா 5 : உன்னால நான் கெட்டன்.

(சண்டையிடுகின்றன)

தம்பிப் புறா : இஞ்ச, இந்தச் சண்டையும் பிரிவினையும்தானே எங்களைக் கெடுத்தது. நாங்கள் எல்லாம் புறாக்கள். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். எல்லோரும் ஒற்றுமையாகத் தப்ப வழிபாருங்கோ.

தங்கச்சிப்புறா: என்ன வழி நீயே சொல்லு.

தம்பிப் புறா : நாங்கள் எல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்து எங்கட முழுப் பலத்தையும் சேர்த்து வலையைத் தூக்கிக் கொண்டு பறப்பம். அடுத்த காட்டில எனக்குத் தெரிந்த ஒரு எலியார் இருக்கிறார். அவர் தன்ர கூரான பல்லால இந்த வலைய நறுக்கி எங்களுக்கு உதவுவார்.

புறா : பிறகு நாங்கள் சுதந்திரமாகப் பறக்கலாம்.

அம்மாப்புறா : புத்திசாலிப் பொடியன் நீ.

அப்பாப்புறா : நல்ல புத்தி இப்பதான் சிந்திக்கிறியள் பிள்ளைகளே. முதலில் எல்லாரும் ஒன்றுபடுங்கோ முழுப் பலத்தோட வலைய தூக்குங்கோ ஒன்று.... இரண்டு....... மூன்று
(வலையைத் தூக்க முடியாமல் கீழே விழுகின்றன)

தம்பிப் புறா : பிறகும் முயற்சியுங்கோ ஒன்றுபட்டால்

எல்லாப் புறாக்களும் : உண்டு வாழ்வு.

தம்பிப்புறா : ஒற்றுமை நீங்கில்

எல்-புறா : அனைவருக்கும் தாழ்வு.

தம்பிப்புறா : வலையைத் தூக்கி

எல்-புறா : எழுந்திடுவோம்.

தம்பிப்புறா : வானத்தின் மீது

எல்-புறா : பறந்திடுவோம்
(மீண்டும் கீழே விழுகின்றன)

தம்பிப்புறா : பிறகும் முயற்சியுங்கோ

(பாடகர் ஒருவர் வந்து DR இல் நின்று பாடுகிறார். ஒவ்வொரு பாடலடிக்கும் இசைக்கும் ஏற்ப புறாக்கள் மெல்ல மெல்ல வலையைத் தூக்குவது போல் அபிநயிக்கின்றன. இறுதி அடிக்கு வலையை மேலே தூக்குவது போல அமையும் வகையில் வலை தூக்கும் அபிநயம் படிப்படியாக இருக்க வேண்டும்)

பாடகர் : (பாடல் )

ஒன்றுபட்டிவை எழுந்தனவே



புறாக்கள் : ஆ ஆ ஆ...... ஆ ஆ ஆ......

பாடகர் : ஒற்றுமையாக எழுந்தனவே.

புறாக்கள் : ஆ ஆ ஆ...... ஆ ஆ ஆ......

பாடகர் : கைகளைக் கோர்த்து ஒன்றாயினவே.

புறாக்கள் : ஆ ஆஆ.... ஆ ஆ ஆ....

பாடகர் : கவலைய விட்டு எழுந்தனவே.

புறாக்கள் : ஆ ஆஆ.... ஆ ஆ ஆ....

பாடகர் : வலையைத் தூக்கி எழுந்தனவே.

புறாக்கள் : ஆ ஆஆ.... ஆ ஆ ஆ....

பாடகர் : வானம் மீது பறந்தனவே.

புறாக்கள் : ஆ ஆஆ.... ஆ ஆ ஆ....

(புறாக்கள் வலையை தூக்கிக் கொண்டு பறக்கின்றன)

ஆள் 1 : (மேடையின் மத்தியில் வந்து) ஆ! இஞ்ச, சோம்பன் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறார். ஆ, அங்க குளிச்சுப்போட்டு இடும்பன் கொம்பனி இறைச்சி சாப்பிட வருகுது.

(இடும்பன் குழாம் UR இல் இருந்து வருகிறது. அங்குமிங்கும் ஓடிப் புறாக்களைத் தேடுகிறது. பின்னர் இடும்பன் சோம்பன் அருகில் வருகிறான்.)

இடும்பன் : டேய்! டேய்! சோம்பா, (சோம்பன் திடுக்கிட்டு விளிக்கிறான்.) எங்கையடா புறாக்கள்? எங்கையடா வலை?

சோம்பன் : (திரு திரு என்று விழிக்கிறான். ஓடிப் பார்த்து) எங்க புறாக்கள்? எங்க வலை?

திடும்பன் : மொக்கா, உன்ன நம்பி விட்டுட்டுப் போனமே (சோம்பன் தலையைத் தொங்கப் போடுகிறான்)

குடும்பன் : சே, என்னமாப் பசிக்குது. எத்தன ஆசையோட இந்தப் புறாக்களைச் சாப்பிடலாம் எண்டு வந்தன். (சோர்ந்து போய் அரைவட்ட வடிவில் மேடையில் அமர்கிறார்கள். DC யில் சோம்பன் இருக்க, அவனைச் சுற்றியபடி வேடர்கள் சோகமாக அமர்ந்திருக்கிறார்கள். பின்னால் ஆள்1 வருகிறார்.)

ஆள் 1 : எலியர் பிரண்டிட்ட புறாக்கள் எல்லாம் போச்சினம். எலியர், நறுக்நறுக் எண்டு வலய அறுத்து எறிஞ்சார். வேடன்களுக்குப் புத்தி சொல்லப் புறாக்குஞ்சுகள் அம்மா, அப்பாவோட திரும்பி வந்துதுகள்.

(பழையபடி சென்று அமர்கிறார்.)

(தம்பிப்புறா ஓடிவந்து வேடர்களைப் பார்த்து பரிகசித்து விட்டு, ஏனைய புறாக்களைக் கூப்பிட அவை பறந்து வருகின்றன.)

(வேடர்களுக்குப் பின்னால் அரைவட்ட வடிவில் நின்று பாடி ஆடுகின்றன.)

(பாடல்)

தம்பிப்புறா : வேடர்காள், வேடர்காள்
புத்தி கெட்ட வேடர்காள்

பாடகர் : (திருப்பிப் பாடல்)

தங்கச்சிப்புறா: தப்பித்துக் கொண்டோமே. - நாங்கள்
தப்பித்துக் கொண்டோமே.

பாடகர் : (திருப்பிப் பாடல்)

புறாக்கள் : ஒற்றுமைப்பட்டதால் - நாங்கள்
தப்பித்துக் கொண்டோமே.

பாடகர் : (திருப்பிப் பாடல்)

புறா 3 : கொலைகள் செய்யாதீர்- இனி
கொடுமை செய்யாதீர்.

பாடகர் : (திருப்பிப் பாடல்)

புறா 4 : வலை விரியாதீர் - புறா
பிடிக்க எண்ணாதீர்

பாடகர் : (திருப்பிப் பாடல்)

தம்பிப்புறா : தப்பித்துக் கொண்டோமே - நாங்கள்
தப்பித்துக் கொண்டோமே.

பாடகர் : (திருப்பிப் பாடல்)

புறாக்கள் : ஒற்றுமைப் பட்டதால் - நாங்கள்
தப்பித்துக் கொண்டோமே.

பாடகர் : (திருப்பிப் பாடல்)

(பாடலைப் பாடியபடி எல்லாரும் அரைவட்டமாகிறார்கள். நாடகத்தில் பங்குபற்றிய அனைவரும் மேடையில் அரைவட்டத்திலும் இணைகின்றனர். கைகளைத் தட்டியபடி சபையோருக்கு வணக்கமுரைத்து ஒருவர் பின் ஒருவராகக் கையைத் தட்டிப் பாடியபடி மாணவர் மேடையை விட்டுச் செல்கின்றனர்.)

***-பேராசிரியர் சி.மௌனகுரு-***

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| உறைநிலை | - | அசையும் பொருள் திட நிலை அடையும் தன்மை |
| நெறியாளர் | - | வழிகாட்டும் ஆசிரியர் |
| சீன்ஸ் | - | காட்சிகள் |
| வெருட்டுதல் | - | பயமுறுத்தல் |
| பாகவதர் | - | கர்நாடக இசைப்பாடகர் |
| அபிநயித்தல் | - | இடம், கருத்து, காலம் முதலியவற்றை முகபாவத்தாலும் உடல் உறுப்புகளாலும் உணர்ச்சியோடு வெளிப்படுத்தல் |
| கௌதாரி | - | இறைச்சிக்காக வேட்டையாடப்படும் ஒரு பறவை |
| காடை | - | கோழியைப் போன்ற ஒரு வகைப் பறவை |
| அனாயாசமாக | - | மிகச் சுலபமாக |
| அப்பாவி | - | தற்காத்துக் கொள்ளவும், சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளவும் தெரியாத நபர் |
| பொல்லாப்பு | - | (பிறருடைய) வெறுப்பு |
| கணநேரம் | - | நீண்ட நேரம் |
| சாமை , வரகு | - | தானிய வகைகள் |
| தாழ்வு | - | குறைந்த உயரம் |

## கிரகித்தற் பயிற்சி

*1 இந்த நாடகத்தை எழுதியவர் யார்?*

*2 குருவிகள் நடிக்கப்போகும் நாடகம் எது?*

*3 வலையில் அகப்படும் பறவைகளை என்ன செய்வதாக கடம்பன் கூறுகிறான்?*

*4 "பறவைகள் பாவமெல்லே, பிடிக்கிறது சரியே" எனக் கேட்பவன் யார்?*

*5 வேடர்கள் பறவை பிடிக்க என்னென்ன தானியங்களைப் பயன்படுத்துகிறார்கள்?*

*6 வேடர்கள் குளித்து விட்டு வரும் வரை வலையில் விழுந்த புறாக்களை காவல் செய்தவன் யார்?*

*7 இந்த நாடகம் கூறும் செய்திகள் எவை?*

*8. இந்த நாடகத்தைக் கற்கும்போது உமது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை விளக்கி எழுதுக.*

# மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : நீங்கள் விரும்பும் ஒருவரைப் போல் பாவனை செய்து பேசுக.

செயற்பாடு 2 : குழுவாகச் செயற்பட்டு இந்நாடகத்தை பாத்திரமேற்று நடித்துக் காட்டுக.

செயற்பாடு 3 : நிகழ்வு ஒன்றிற்காக வடிவமைக்கப்படும் அழைப்பிதழ்களைத் தேடிப்பெற்று அவற்றின் உள்ளடக்கம், அமைப்பு முதலியவற்றை ஒப்பிட்டுக் கலந்துரையாடுக.

செயற்பாடு 4 : 'பெற்றோரை மதிப்போம்' என்ற தலைப்பில் உரையாடல் ஒன்று எழுதுக.

# மொழிவளம்

## ▶ பழமொழிகள்

**பயிற்சி:-**

01. ***பின்வரும் பழமொழிகளை வாக்கியங்களில் பொருத்தமாகப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவோம்.***
    - *அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு*
    - *அழுத பிள்ளை பால் குடிக்கும்*
    - *தவளையும் தன் வாயால் கெடும்*

02. *உங்களது பிரதேசத்தில் வழங்கப்படும் பழமொழிகள் பத்தினைச் சேகரித்து எழுதுங்கள்.*

# இலக்கணம்

## ▶ இடைச் சொற்கள்

*பின்வரும் சொற்களை அவதானிப்போம்.*

***தம்பி    தாத்தா    கொடு***

*இவை தனித்திருக்கும் சொற்களாகும். இவை ஒரு வாக்கியமாகவும் ஆகவில்லை இச்சொற்களை எவ்வாறு ஒரு பொருளுள்ள வாக்கியமாக ஆக்க முடியும் என்பதைப் பார்ப்போம்.*

1. *தம்பிக்குத்; தாத்தா கொடுத்தார்.*
2. *தம்பிக்கும் தாத்தாவுக்கும் கொடுத்தேன்.*

*இந்த வாக்கியங்களில் இடம்பெறும் கு , த் , உம் , ஏன் ஆகிய உருபுகள் இடைச்சொற்களாகும். இவை தனித்து நின்று பொருள் தராது.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பெயர்ச் சொல், வினைச் சொற்களுடன் சேர்ந்து இலக்கணப் பொருள் தரும் சொல்லை இடைச் சொல் என்று சொல்லலாம்.

பெயர்ச் சொற்கள் வினைச்சொற்களுடன் இணைந்து வந்து இடைச்சொற்கள் எவ்வாறு வாக்கியங்களை ஆக்குகின்றன என்பதை விளங்கிக் கொள்வோம்.

1. இசை + உம் கதை + உம் கேள் + ட் + ஓம்
   (இசையும் கதையும் கேட்டோம்.)
2. யார் +ஓ சொல் + ன் + ஆர்கள்
   (யாரோ சொன்னார்கள்.)
3. நான் + தான் உன் + இடம் + கேள் + ட் + ஏன்
   (நான்தான் உன்னிடம் கேட்டேன்.)
4. அம்மார் + மட்டும் என் + ஒடு + வா + ந் + த் + ஆன்
   (அம்மார் மட்டும் என்னோடு வந்தான்.)
5. நீ + ஆ இது + ஐ எழுது + இன் + ஆய்
   (நீயா இதை எழுதினாய்?)

இடைச் சொற்கள் பல வகைப்படும் அவற்றில் சிலவற்றை மாத்திரம் இப்போது அறிந்து கொள்வோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வேற்றுமை உருபுகள் | - | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| 2. | பன்மை விகுதிகள் | - | கள், மார் |
| 3. | திணை, பால் விகுதிகள் | - | ஏன், ஓம், ஆள், ஆர்கள், அது |
| 4. | கால இடைநிலைகள் | - | கின்று, கிறு, வ், ப், த், ற், ட், இன் |
| 5. | எச்ச வினை விகுதிகள் | - | அ, உ, இ |
| 6. | எதிர்மறை இடைநிலைகள் | - | ஆ, ஆத், மாட்டு |
| 7. | தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் | - | உம், கூட, ஆவது |

## பயிற்சி

**01. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் இடைச்சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.**

1. நானும் தம்பியும் போனோம்
2. பறவைகள் எங்கே போகின்றன.
3. தண்ணீராவது குடி.
4. அப்பாவோ வந்தார்.
5. நீங்கள் மட்டும் வாருங்கள்.
6. மழையா பெய்தது.

**02. சுருக்கமான விடை தருக.**

1. இடைச்சொல்லின் முக்கிய பண்பு யாது?
2. உமக்குத் தெரிந்த இடைச்சொற்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.